## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.121/2021**

**வாக்குமூலம்..வா.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | ஜாதி | |
| த/பெ. | முத்தையா | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 62 /2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 13.11.2024 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் தற்போது அறந்தாங்கியில் வசித்து வருகிறேன். எனக்கு தொழில் வியாபாரம் ஆகும். நான் என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் விவசாய தொழில் என்று குறிப்பிட்டுள்ளது விவசாய தொழில் கிடையாது என்றாலும் வியாபாரம் தான் எனது தொழில் என்றாலும் சரிதான். என்னை தாவா வழக்கில் சாட்சியம் அளிக்க 1ம் வாதி மாரிமுத்து செட்டியார் தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை கையெழுத்து மட்டும் தான் செய்தேன். வழக்கு யார் தாக்கல் செய்தது என்றால் வச்சலா ஆச்சியும் ஹேமாவும் தான் வழக்கு போட்டார்கள். அவர்கள் இருவரும் சுப்பிரமணியனுக்கு எதிராக தான் வழக்கு போட்டார்கள்.

2) வச்சலா ஆச்சியும் ஹேமாவும் என்ன வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் வச்சலா ஆச்சி இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்திருக்கிறார் அந்த சொத்தை மீட்பதற்காக வழக்கு போட்டிருக்கிறார். மேற்படி இனாம் செட்டில்மெண்ட் தேதி மற்றும் விவரம் தெரியும் என்றால் தேதி நியாபகம் இல்லை. வச்சலா ஆச்சி சுப்ரமணியனுக்கு எழுதி கொடுத்தார். எப்போது மேற்படி ஆவணம் ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் தேதி நியாபகம் இல்லை. நான் இனாம் செட்டில்மெண்ட் எழுதிகொடுத்த போது உடனிருந்தேனா என்றால் இருந்தேன். தாவா சொத்தின் புல எண் என்னவென்றால் 11/10 ஆகும். மேற்படி புல எண். 11/10 என்பது நகர புல எண்ணா கிராம புல எண்ணா என்றால் நகர புல எண் ஆகும். மேற்படி புல எண் 11/10 ன் பழைய புல எண் எனக்கு நியாபகம் இல்லை.

3) தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அவரது மகனுக்கு சட்டப்படி தான் எழுதி கொடுத்திருக்கிறார் என்றாலும் அதை வாதிகள் கேள்வி கேட்கமுடியாது என்றாலும்

சரியல்ல. தாவா சொத்தை என் முன்பாக எழுதி கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும் எனக்கு அந்த விவரம் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தின் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் வச்சலா ஆச்சியின் கணவர் மாரிமுத்து செட்டியார் சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறார். வேறு யாரு சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறார் என்றால் வேறு யாருக்கும் சாட்சி கையெழுத்து போடவில்லை. வச்சலா ஆச்சி இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்தது மாரிமுத்து செட்டியாருக்கு தெரிந்து தான் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

4) அதேபோல் வச்சலா ஆச்சி வா.சா.ஆ.1 ஆவணத்தை மகனுக்கு விருப்பப்பட்டு தான் எழுதிவைத்தார் என்றால் சரிதான். அவ்வாறு விருப்பப்பட்டு எழுதிவைத்த ஆவணத்தை 2 ம் பிரதிவாதியிடமிருந்து திரும்ப கேட்கமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து நாளது தேதிவரை 2 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருக்கிறது என்றால் சரியல்ல. 1ம் வாதியின் அனுபவத்தில் தான் இருக்கிறது. 1ம் வாதியின் அனுபவத்தில் தாவா சொத்து இல்லை என்றாலும் நான் அவரது நண்பர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மாரிமுத்து செட்டியாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**